RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1994

# மருதக்கலி காட்டும் வாழ்வியல்

**ப. கயல்விழி** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), பெரம்பாலூர்-621212, தமிழ்நாடு, இந்தியா

# Virtue in Maruthakali

**P. Kayalvizhi** [a, *]

[a] Department of Tamil, Dhanalakshmi Srinivasan College of Arts and Science for women (Autonomous), (Affiliated to Bharathidasan University), Perambalur-621212, Tamil Nadu, India

* Corresponding Author: saravanabava0788@gmail.com

Received: 30-08-2022
Revised: 01-10-2022
Accepted: 26-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Kalithogai, is one among the Ettuthogai book. This book deals with home life, love, culture, customs and traditions. It is divided into five parts. One should judge a person based on his/her moral values. The best virtue is to protect moral values one has attained and return it to the rightful person at the right time. There are many virtue in Maruthakali. The people of Marutham land are rich for six months due to the yield of paddy, sugarcane. Marutham is filled with plenty of land and water resources. It is said in Maruthakali that the man who lives without looking for the afterlife is the possessor and that the best gift is helping the needy without denying. This article is intended to highlight the human life through such Maruthakali songs.

**Keywords:** Landlord, Generosity, Eye of morality, Eyes, Domesticity, Virtue

## முன்னுரை

நெல், கரும்பு, வாழை என்று விளைச்சலால் ஆறு மாதம் பசுமையாகவும் அறுவடைக்குப் பிறகான ஆறு மாதம் வெறுமையாகவும் இருப்பது மருத நிலத்தின் தன்மையாகும். பசுமையான காலங்களில் நன்கு உழைக்க கூடிய இம்மக்கள் அறுவடைக்குப் பிறகு மீதமுள்ள காலங்களை விழாக்கள் கொண்டாடியும் மகிழ்ச்சியை விரும்பியும் இன்புற்றிருப்பர். வளமையும் வெறுமையும் மாறி மாறி அமையும் தன்மையை இந்நிலம் பெற்றிருப்பதைப் போல இந்நிலத்தின் தலைமக்களும் அத்தன்மையைப் பெற்றிருப்பர்.

ஈகை என்பது வறியோர் பசி தீர்த்தலே ஒருவன் தான் செல்வத்தை சேர்த்து வைக்கும் இடமென்று சங்ககால மக்கள் எண்ணி வாழ்ந்தமை மருதக்கலியில் இடம்பெறுகிறது. பசிப்பிணியால் வாடுவோர்க்கு இல்லை என்று கூறாது வழங்கிய பண்பு தமிழர்களிடையே இருந்துள்ளது என்பதை சங்கப் பாடல்களின் வழியே அறியலாம். நிலவளமும் நீர்வளமும் மிகுந்த நிலக்கிழார்களும் அவரைச் சார்ந்து வாழும் பிற மக்களும் உள்ள நன்செய் நிலம் மருதம். வளமை மிகுதியும் அதனால் அமையும் இன்ப நுகர்ச்சியும் இந்நிலம் வாழ் மக்களின் தன்மையை இவ்வியலில் அமையப்பட்டுள்ளது.

## இல்வாழ்க்கை

தமிழர்கள் உயர்வாகப் போற்றும் இல்லற வாழ்வில் தான் அன்பு முழுமை அடைகிறது. இல்லற வாழ்வில் உண்டாகும் இன்பத்தை முழுமையாக உணர்ந்து அனுபவித்தவர்கள் நம் தமிழ் மக்கள்.

வாழ்வுக்கென இலக்கியம் மட்டும் படைக்காமல் இலக்கணமும் படைத்து உலகிற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தார்கள். உறவினரைப் போற்றுதல் அடக்கமுடையவராய் இருத்தல் தகைமை உடையவராய் இருத்தல் நற்செயல்களால் பெருமை உடையவளாக இருத்தல் ஆகிய ஐந்து உயர் பண்புகளைப் பெற்ற பெண் சிறந்த பெண்ணாவாள். இதனை

"பல் மலர்ப் பழனத்தை பாசடைத் தாமரை

இன்மலர் இமிர்பு ஊதும் வணர் இருந்தும்பு

உந்துறை உடைந்த பூம்புனல் சாய்பு புலந்துஊடி

பண்புடை நல்நாட்டுப் பகைதலை வந்தென

அதுகை விட்டு அகன்று ஒரீஇ"

என்ற மருதக்கலிப் பாடல் புலப்படுத்துகிறது (Ilampurnaar, 2016). அன்பில் சிறந்தவர்களால் மட்டும் இல்லறத்தில் சிறந்து விளங்கிட முடியாது. ஒருவரையொருவர் புரிந்து கொள்பவர்களாக அவர்கள் இருந்தால் தான் இல்லறம் சிறக்கும். புரிதல் இல்லாத வாழ்க்கைத் துன்பம் தரும் என்பதைக்

"உடன் பாடில்லாத மனைவி தோள் இன்னா" என்ற இன்னா நாற்பது பாடல் வழி அறியமுடிகிறது (Manickavasagam, 2007).

## கற்பு நெறி

இல்லற வாழ்க்கையின் தொடக்க நிலை களவு வாழ்க்கையில் அமைந்தாலும் கற்பில் சென்று முடிவதே சிறப்புடையதாகக் கருதப்படுகிறது. இதனை,

"மனம் கமழ்கோதை பரிவுகொண்டு ஓச்சி

வணங்கு காழ் வங்கம் புகும

ஒருத்தி இறந்த களியான் இதழ்மறந்த கண்ணள்

பறந்தவை மூசக் கடிவாள் கடியும்

இடம் தோற்றாள் சோர்ந்தனள் கை"

என்ற மருதக்கலிப் பாடல் இல்லற கடமைகளை இனிதே நிறைவேற்றும் சிறந்த கற்புடைய தலைவி இருக்கின்ற இல்லம் சிறந்த இல்லமாகும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது (Puliyur Kesikan, 2010).

## பிறனில் விழையாமை

பிறன் மனை நாடாது ஒழிக என்பது சான்றோர் கூற்று. தன் மனைவியைத் தவிர பிறப் பெண்களை நாடாது வாழும் ஆணுக்குப் பேராண்மை வந்து சேரும் என்பது அறிவிலும் பண்பிலும் உயர்ந்தோர் வாக்கு. பண்டையத் தமிழர் தம் வாழ்வில் கடைபிடிக்க விரும்பிய அறத்தில் இதுவும் ஒன்று. இதனை,

"புனைஇழை நோக்கியும் புனல் ஆடப்புறம்

சூழ்ந்தும் எரியங்கி வானவந்தான் தோன்றி

மாபத்தினி நின்னை மானப் பிழைத்தநான்

பாயெரி இந்தப் பதியூட்டும் பண்டோ யோர்

மேலும் இதனை,

“பிறன் மனைப் பின்னோக்குங் மாட்டு இனிது”

என்ற பூதஞ்சேந்தனாரின் பாடல் வரிகளும் இக்கருத்தைப் புலப்படுத்துகிறது (Puliyur Kesikan, 2010).

“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு

ஆறனொன்றோ ஆன்ற ஒழுக்கு”

என்ற வள்ளுவர் குறள்,

பெரிய சான்றோர் பெருமக்கள் பிறர் மனையை நாடாதிருத்தலே அறமாகவும் ஒழுக்கமாகவும் கருதினர் என்பதை விளக்குகிறது (Puliyur Kesikan, 2008).

## தவறை மறத்தல்

தலைவன் அடிக்கடி தலைவியை விட்டுப் பிரிந்து சென்று பரத்தையுடன் தங்கியிருத்தலை அறிந்த இல்லறத் தலைவி ஊடல் கொள்கிறாள். தலைவன் பரத்தையைவிட்டு இல்லத்திற்கு வரும்பொழுது ஊடல் கொண்டிருந்த தலைவி தன் கணவன் எவ்வளவு தவறு செய்தாலும் அதனைப் பொருட்படுத்தாது தன் நெஞ்சம் மாறி அவனை ஏற்றுக் கொள்ளும் இயல்பை நினைத்து ஊடல் நீங்குகிறாள். இதனை,

“மாணா செயினும் மறுத்து ஆங்கே நின்வயின்

காணின் நெகிழும் என்நெஞ்சு ஆயின் என்உற்றாய்

போணாய் நீ பெட்பச் செயல்”

என்ற அடிகள் மூலம் தலைவன் செய்த தவறைப் பொருட்படுத்தாமல் தலைவி அவன் மீது அன்பு காட்டும் இல்லறப் பண்பை வெளிப்படுத்துகிறது (Puliyur Kesikan, 2010).

### ஈகை

நல்ல மனம் படைத்தோர் தன்னிடம் பொருள் இல்லாத நிலையிலும் மகிழ்வுடன் பிறார்க்கு கொடுப்பர். பிறப்பதும் பிறந்தவர்கள் ஒரு நாள் இறப்பதும் இவ்வுலகில் உறுதியான நிகழ்வாகும். தன்னிடம் கொடுக்கும் தகுதி இருக்கும் போதே இல்லாதவர்க்கு மிகிழ்வுடன் கொடுக்க வேண்டும். தம்மிடம் உள்ள பொருளை இல்லை என்று கூறாமல் வறியவர்க்கு கொடுப்பதே சிறந்த கொடையாகும். வறியவர்க்கு கொடுப்பதைக் காட்டிலும் ஒருவன் அடையும் மேன்மை வேறில்லை என்பதை,

“வலிஅழிந்தார் மூத்ததர் வடக்கிருந்தார் நோயால்

நலிபுஅடைந்தார் நாட்டுஅறைபோய் நைந்தார் - மெலிவுஒழிய

இன்னவரால் என்னாராய் ஈந்த ஒருதுற்று

முன்னவராச் செய்யும் மதித்து”

என்ற சிறுபஞ்சமூலப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன (Puliyur Kesikan, 2010).

## மக்கட்பேறு

மனிதர்கள் தம் வாழ்வில் பெறுகின்ற செல்வங்கள் பலவற்றுள் அறிவறிந்த மக்களைப் பெற்றலைக் காட்டிலும் சிறந்த செல்வம் பேறு வேறில்லை என்பதை,

“பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிழறிந்த

மக்கட்பேறு அல்ல பிற:”

என்ற வள்ளுவர் வாக்கு உறுதிப்படுத்துகிறது (Puliyur Kesikan, 2008).

## பண்புடைமை

கல்வி கற்று அறிவைப் பெற்று மனம் தெளிவுற்று நல்லொழுக்கங்களை கடைப்பிடித்து நடப்பது மனிதப் பண்புகளில் மிகச் சிறந்த பண்பாகும். தன்னை உண்மையாக நம்பினவர்க்கு கெடுதல் செய்ய எண்ணாத பண்பைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை என்பதை,

"தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்குக்காப்

பத்திமையிற் பாங்கினிய தில்"

என்றுரைப்பர். இதனைக் கலித்தொகையின் பின்வரும் பாடலும் புலப்படுத்துகிறது (Puliyur Kesikan, 2008).

"நீருள் அடைமறை ஆய்இதழ்ப் போதுபோல் கொண்ட

குடைநிழல் தோன்றும் நின்செம்மலைக் கானூடே

இவன் மன்றயான் நோவஉள்ளம் கொண்டஉள்ள

வாயில்வரை இறந்து போத்தந்து"

என்ற வரிகள் உணர்த்துகிறது (Puliyur Kesikan, 2010).

## ஒழுக்கம்

ஒழுக்கம் என்பதற்கு மரியாதை முறை வழி உயர்ச்சி எழுச்சி என பொருள்படும்.

"பண்பெணப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"

என்கிறது கலித்தொகை (Puliyur Kesikan, 2010). ஒழுகுதல் என்பது தொடர்ந்து செய்து கொண்டே வருதல் என்று பொருள். ஒருநல்லப் பழக்கத்தை ஒருவர் செய்துக் கொண்டே வந்தால் அதுவே ஒழுக்கமாகிவிடுகிறது. ஒழுக்கம் உடையோரே உயர்ந்தோர் எனப்படுவர். அப்படி உள்ளவர் காட்டும் வழியைப் பின்பற்றி வாழ்தல் வேண்டும் என்கிறார் தொல்காப்பியர்.

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே

நிகழ்ச்சி யவர்கட் டாகலான"

என்னும் நூற்பா இதனைத் தெளிவுறுத்தும். ஒழுக்கம் பேணுதலே சிறப்பைக் கொடுக்கும் அச்சிறப்பே சிறந்த பயனாகும் (Puliyur Kesikan, 2008).

## புகழ்

தன்னை மதித்து வந்தவரை இகழ்ந்து பேசாமல் ஏற்றுக்கொள்வதும் செல்வம் இருக்கும் காலத்திலும் நண்பர்களை மறவாமல் நினைப்பதும் பகைவரிடம் செல்வம் இருப்பதை நினைத்து மகிழாமல் வாழும் தன்மை உடையவன் புகழுடையவன்ஆவான். இதனை,

"தன்னாச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்

மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்"

என்ற பாடல் வரிகள் உணர்த்துகிறது.

பெரியவர் சிறியவர் என்பதை உருவத்தால் இன்றி பண்பாட்டால் அறிய வேண்டும். தம்மிடம் ஒருவர் கொடுத்தப் பொருளைப் பாதுகாத்து உரிய காலத்தில் உரியவரிடம் சேர்பித்தல் சிறந்த அறமாகும். வருமையால் வருந்துவோர்க்கு கொடுத்து உதவுதல் வறுமை நிலையிலும் உள்ளவர்களுக்கு

எவ்வித தீங்கும் செய்யாமல் நட்பு கொள்வதை அதிகப்படுத்துவதும் சிறந்த அறமாகும் (Rajathandiram, 2012).

பிறர் வழியாக செலவும் செய்யக் கூடிய காரியங்களை நினைத்து வருந்தாமல் நெறியின் கண் சேறல் பிறரைப் பழி கூறும் சொற்கள் நல்லவர்களால் சொல்லப்பட்ட குணங்களை நீக்குதல் அறமாகும். இதனை

"வழிப்படர் வாய்ந்த வருந்தாமை வாய்அல்

குழிப்படல் தீச் சொற்ளோடு மொழிப்பட்ட

காய்ந்து விடுதல் களைந்து உய்யக் கற்றவர்

ஆய்ந்து விடுதல் அறம்"

என்ற பாடல் வழி அறியலாம் (Manickavasagam, 2006).

## முடிவுரை

இல்லற வாழ்வில் உறவினரைப் போற்றுதல் அடக்கமுடையவராக இருத்தல் தகைமையுடையவராக இருத்தல் நற்செய்கைகளை செய்தல் நாணம் கொண்டிருத்தல் ஆகிய ஐந்து உயர்ப்பண்புகளைப் பெற்றிருந்தனர். தன்னிடம் கொடுக்கும் தகுதி இருக்கும் போதே இல்லாதவர்க்கு மகிழ்வுடன் கொடுக்க வேண்டும். அப்படி கொடுப்பதே சிறந்த கொடையாக எண்ணி வாழ்ந்து வந்துள்ளனர். இல்லற வாழ்வில் தன்னை முழுமையாக அர்ப்பனித்துக் கொண்டப் பெண் நல்ல புகழையுடைய மக்களைப் பெற்றெடுத்து தாய்மை நிலையை அடைவதன் மூலம் சமூதாயத்தால் போற்றி ஒழுகப்படுகிறாள். மனிதப் பண்புகளில் மிகச் சிறந்த பண்பு தன்னை உண்மையாக நம்பியவர்க்கு கெடுதல் செய்ய எண்ணாத பண்பைக் காட்டிலும் சிறந்தது வேறில்லை. எவரொருவர் ஒழுக்கத்தை வாழ்வின் இன்றியமையாத பண்பாக கொள்பவரை தாழ்வு ஒருபோதும் நெருங்காது. மேற்கண்ட கருத்துகளை மருதக்கலிப் பாடல்கள் உணர்ச்சியை ஏற்படுத்தி உள்ளத்தை தொட்டு மனிதர்களுக்கு வாழ்வியலை வெளிப்படுத்துவதாக விளக்குகிறது.

## References

Ilampurnaar, (2016) Tholkappiyam, Saradha Pathippagam, Chennai, India.

Manickavasagam, (2006) Naladiyaar, Uma Pathippagam, Chennai India.

Manickavasagam, (2007) Eniyavai Narpathu, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan (2010) Kalithogai, Sri Senbaga Pathippakam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Thirukkural Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Rajathandiram, (2012) Thirukadukam, Gowra Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License